[10th March 1965

திரு. செ. மாதவன் : முடிவு எப்படி இருந்தாலும் அந்த நபர் தனிப்பட்ட விரோதத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று சொல்லப்படுகிறதே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கோர்ட்டிலே வழக்கு இருப்பதால் இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை.

22nd Indian Labour Conference

* 194 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the decisions of the 22nd Indian Labour Conference held in Bangalore on 29th and 30th July 1964, have been received by the Government; and

(*b*) if so, details of the action taken in so far as they relate to our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A statement [a] is placed on the table of the House.

Industrial disputes during 1962–63 *and* 1963–64

* 195 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Chief Minister be pleased to state the number of disputes settled and the number referred to arbitration under the Industrial Disputes Act, 1947, during the years 1962–63 and 1963–64?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

	1962–63.	1963–64.
Number of disputes settled	1,067	1,140
Number of disputes referred to arbitration under the Industrial Disputes Act, 1947	1	2

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தொழில் தகராறு சட்டத்தின் 10-வது செக்ஷன்படி அரசாங்கம் ரெபர் செய்திருக்கிறது. அப்படி ரெபர் செய்வதிலே அரசாங்கம் ஏதாவது ஒரு கொள்கை கடைப்பிடிக்கிறதா ? எந்தெந்த தகராறுகள் லேபர் கோர்ட்டிலே தீர்க்கப்படுகின்றன? எந்தக் கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கொள்கை விஷயம் பற்றி கேள்விக்கு பதில் அளிப்பதற்கில்லை. பின்னால் மானியம் வரும்போது விளக்கம் கூறலாம்.

திரு. எம். எஸ். மணி : தொழில் தகராறு சட்டத்தின் கீழ் தீர்த்து வைக்கப்பட்ட வழக்குகள் எத்தனை என்று மாவட்டவாரியாக தெரிவிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னிடம் தகவல் இல்லை.

திரு. செ. மாதவன் : இந்தத் தொழில் தகராறில் லேபர் கோர்ட்டுக்கு ரெபர் செய்வதிலே அரசாங்கம் இன்எக்ஸ்பிடியன்ட் என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறதே அதற்கு அரசாங்கம் என்ன விளக்கம் அளிக்கிறது ?

---

[a] **Printed as Appendix on pages 164–172**

10th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கத்திற்கு டிஸ்க்ரீஷன் இருக்கிறது. சில கொள்கைகள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. குறிப்பிட்ட வழக்குகளிலே அரசாங்கம் எந்த அளவுக்கு விளக்கம் கூற முடியுமோ அந்த அளவிற்குத் தான் அளிக்கும்.

திரு. செ. மாதவன்: இந்த மூன்று கோர்ட்டுகளிலும் எவ்வளவு வழக்குகள் பெண்டிங்காக இருக்கின்றன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: என்னிடம் தகவல் இல்லை.

திரு. செ. மாதவன்: அரசாங்கத்திற்கு தொழில் தகராறு சட்டத்தின் 10-வது பிரிவின்படி டிஸ்க்ரீஷன் இருக்கிறது. ஆனால் ஜுடீஷியல் டிஸ்க்ரீஷனை அரசாங்கம் சரிவர பிரயோகிக்கவில்லை. சுப்ரீம் கோர்ட் அரசாங்கத்தின் கொள்கையை ஒத்துக்கொள்ளவில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

கனம். திரு. எம். பக்தவத்சலம்: என்னுடைய கவனத்திற்கு வரவில்லை.

திரு. ஜே. மாதா கவுடர்: லேபர் ஆபீசர்களுக்கு தகராறிலே தீர்ப்பு சொல்லக்கூடிய அதிகாரம் அதிகமாக இல்லை. அவர்கள் வெறும் கன்ஸிலியேட்டிங் ஆபீசராக இருக்கிறார்கள். ஆகவே சிறு சிறு தகராறுகளைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு அதிக அதிகாரம் அளிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எம். எஸ். மணி: இந்த தொழில் தகராறு சட்டத்தின் கீழ் எத்தனை வழக்குகள் இன்னும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன? இப்பொழுது இருக்கும் மூன்று கோர்ட்டுகள் போதாததினால் இன்னும் ஒரு கோர்ட் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மேலும் ஒரு கோர்ட் ஏற்படுத்த போதிய அவசியம் வேண்டும். எப்போது அவசியம் இருக்கிறது என்று அரசாங்கம் உணருகிறதோ அப்போது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. செ. மாதவன்: "லீகல் அட்ஜுடிகேஷன்", "இன்பார்மல் அட்ஜுடிகேஷன்" என்று இரண்டு முறைகள் இருக்கின்றன. அப்படி எத்தனை வழக்குகள் ரெபர் செய்து தீர்ப்புக் கூறப்பட்டுள்ளன.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இன்பார்மல் அட்ஜுடிகேஷன் தான் ஆர்பிட்ரேஷன்.

எலும்பு உரத் தொழிற்சாலை

*196 கேள்வி.—**திரு. ம. கமலநாதன்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

இறந்த கால்நடைகளில் இருந்து கிடைக்கும் எலும்புகளைச் சேகரித்து உரத் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியார் துறையிலோ அல்லது பொதுத் துறையிலோ பெரிய அளவில் இம்மாதிரியான தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் இல்லை.

ஆனால் தனியார் துறையில் ஏற்கெனவே சில சிறு தொழிற்சாலைகள் நடந்து வருகின்றன. State Khadi and Village Industries Board-இன் திட்டப்படி எலும்புத் தூள் செய்யும் சிறு தொழிற்சாலைகள் சில நிறுவப்பட்டுவருகின்றன.